23.04.2025
IDOP No. 25/2017
**ம.சா.1 – ஜான் ஆப் ஆர்க்**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :–</u>**

நாங்கள் இருவரும் காதலித்தான் திருமணம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். திருமணம் முடிந்து ஆறு மாதத்திற்குள் எங்களுக்குள் கருத்து வேறுபாடு இருந்தது என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருடன் அடிக்கடி சண்டை போட்டேன் என்றால் சரியல்ல. உன்னை எனக்கு பிடிக்கவில்லை என்றும் உன்னுடன் வாழ மாட்டேன் என்றும், இந்த போலியான நடிப்பு வாழ்க்கை எனக்கு வேண்டாம் என்றும், என்னை போய் லவ் பண்ணுனேனே நான் தான் கேவலமான ஆள் என்றும், சத்தியமா சொல்கிறேன் செத்தாலும் சாவேன் ஒழிய உன்னுடன் வாழ மாட்டேன் என்றும், என்னுடைய லைப் அவ்வளவுதான் என்றும், நான் இப்போதுதான் உன்னை பற்றி முழுசா தெரிந்து கொண்டேன் என்றும், எனக்கு வாழ்க்கையே வேண்டாம் என்றும், நான் வாட்ஸ் ஆப் மெசேஜ் அனுப்பினேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் சனி, ஞாயிறு கிழமைகளில் திருச்சிக்கு வரும்போது நான் அவருடன் சண்டைபோடுவேன் என்றால் சரியல்ல. வேலை பளு காரணமாக ஒரு வாரம் வரவில்லை என்றாலும் நான் அவரிடம் பயங்கரமாக சண்டை போடுவேன் என்றும் அவருக்கு மன உளைச்சல் ஏற்படுத்தும் வரும் வகையில் யாருடன் படுத்துள்ளாய் என்று கேட்பேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் நான் எம் எஸ் சி படிக்க போகும்போது எனக்கு ஸ்கூட்டர் வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. எம் எஸ் டி முடித்த பிறகுதான் பைக் வாங்கி கொடுத்தார். எம் எஸ் சி படித்த பிறகு பிஎட் படித்தேன் என்றால் சரிதான். அதன் பிறகு Teaching TRP Exam க்கு ரூ. 25,000/– என் கணவர் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த Teaching TRP Exam ல் நான் பெயில் ஆகிவிட்டேன் என்றால் சரிதான். பெயில் ஆகிவிட்டதால் நான் மனதளவில் பாதிக்கபட்டடிருந்தேன் என்றால் சரியல்ல. திருமணம் ஆகி 3 ஆண்டுகள் குழந்தை இல்லை என்பதும் மள உளைச்சலை ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்சொன்ன மன உளைச்சல் காரணமாக என் கணவர்

திருச்சிக்கு வந்திருந்தபோது அவரிடம் இந்த பிரச்சனைக்கு எல்லாம் நீதான் காரணம் என்று அவரை திட்டி கையால் கண்ணத்தில் அறைந்து எட்டி உதைத்து கீழேதள்ளி விட்டேன் என்றால் சரியல்ல. அடிக்கடி நான் தற்கொலை செய்து கொள்ள போவதாக மிரட்டினேன் என்றால் சரியல்ல. என் கணவர் என்னை நல்ல மன நல மருத்துவரிடம் காண்பித்து மருத்துவம் செய்ய முயற்சித்தபோது என் தகப்பனார் அதை தடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அதன் பிறகு எம் பில் படித்தேன் என்றால் சரிதான். நான் அதை படித்து கொண்டிக்கும்போது கர்பமமானதால் படிப்பை பாதியில் நிறுத்த வேண்டி இருந்ததது என்றால் சரியல்ல. நான் சொல்வதுதவறு என்றாலும் கர்ப்பம் உற்றதால் நான் படிப்பை பாதியில் நிறுத்தினேன் என்றால் சரியல்ல. அதற்கும் என் கணவர்தான் காரணம் என்று சொல்லி அவரை கண்ணத்தில் அறைந்து, திட்டி ஆர்பாட்டம் செய்தேன் என்றால் சரியல்ல. 2014 வருடம் என் கணவரை அவரது நிறுவனத்தில் இருந்து மெக்சிக்கோ நாட்டிற்கு ரூ. 90,000/- சம்பளத்திற்கு அனுப்பி வைத்திருந்தார்கள் என்றால் 2015ம் வருடம் அனுப்பினார்கள். அவ்வாறு அவர் வெளிநாட்டிற்கு செல்லும்போது நான் அவரிடம் அவ்வாறு வெளிநாட்டிற்கு செல்லவேண்டும் என்றால் என்னுடைய நகைகள் அனைத்தையும் என்னிடம் கொடுத்துவிட வேண்டும் என்றும் மாதமாதம் ரூ. 15,000/- என் வங்கி கணக்கிற்கு அனுப்ப வேண்டும் என்று நிபந்தனை விதித்தேன் என்றால் சரியல்ல. அந்த நிபந்தனைகள் அடிப்படையில் என் கணவர் என்நககைகள் அனைத்தையும் திருபபி கொடுத்துவிட்டார் என்றாலும் மாத மாதம் ரூ.15,000/- அனுப்பினார் என்றாலும் சரியல்ல் .அதிலிருந்து நான் என் தகப்பனார் வீட்டில் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. அதன்பிறகு என் தகப்பனாரும் அவரை தொந்தரவு செய்து பணம் கேட்டார் என்றாலும் அவருக்கும் என் கணவர் பணம் அனுப்பினார் என்றாலும் சரியல்ல. மெக்சிக்கோ நாட்டிலும் நான் அவரை நிம்மதியாக வேலை செய்யவிடவில்லை என்றால் சரியல்ல. நான் வேலை நேரத்திலும் இரவு நேரங்களிலும் அவருக்கு போன் செய்து தொந்தரவு கொடுத்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு போன் எடுக்கவில்லை என்றால் தொடர்ந்து குறுஞ்செய்திகளையும் தொடர்ந்து தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்வேன்

என்றால் சரியல்ல. வாட்ஸ் ஆப் மெசேஜ் மூலமாக அவரை மிகவும் மன உளைச்சலுக்கு உண்டாக்கினேன் என்றால் சரியல்ல. திருமணமானதுக்கு பிறகு என்னுடன் சந்தோஷமாக இருந்த நாட்கள் மிகவும் குறைவு என்றால் சரியல்ல. நான் என் தாய் தந்தையுடன் அதிகம் இருந்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய வளையகாப்பிற்கு ரூ.30,000/– அனுப்பி இருந்தார் என்றால் சரியல்ல. மே மாதம் மெக்சிக்கோவிற்கு சென்ற நபரிடம் குழந்தை பிறப்பதற்கு கண்டிப்பாக வரவேண்டும் என்று அடம் பிடித்த காரணத்தினால் என் கணவர் சென்ற 6 மாதத்திற்குள் விடுப்பு எடுத்துக் கொண்டு ரூ. 1,25,000/– விமான கட்டணம் செலுத்தி என்னை பார்ப்பதற்காக வர வைத்தேன் என்றால் அவரே தான் வருவதாக சொன்னார். அவர் 5 கடன்களுக்கு மாத தவணை செலுத்துகிறார்என்ற விவரம் எனக்கு தெரியும். மேற்சொன்ன கடன்களில் ஒரு சிலவவற்றை அடைக்கலாம் என்று அவர் வரும்போது 2 1/2 லட்சம் எடுத்து வந்தார் என்றாலும் அதை பிள்ளைக்கு ஞானஸ்தானம் செய்ய செலவு செய்ய வைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. மகப்பேறு செலவுகளையும் என் கணவர்தான் பார்த்து கொண்டார் என்றால் சரியல்ல. சாதாரணமாக ஞானஸ்தான நிகழ்ச்சியை வைத்துக் கொள்ளலாம் என்று என் கணவர் சொன்னபோது நான் தான் ஊரில் உள்ள அனைவரையும் அழைத்து வெகு விமர்சியாக நடத்தவேண்டும் என்று அவர் கையிருப்பு பணத்தை எல்லாம் செய்து வைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 08.04.2016 ம் தேதியிட்ட வாட்ஸ் ஆப் குறுஞ்செய்திகளை நான் அனுப்பினேனா என்றால் நான் அனுப்பவில்லை. நான் வாட்ஸ் ஆப்பில் அவ்வாறுதான் குறுஞ்செய்திகளை அனுப்பினேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் என் கணவருக்கு போன் செய்து மெச்சிக்கோவில் இருந்து நிரந்தரமாக இந்தியாவிற்கு வந்துவிடவேண்டும் என்றும் இல்லை என்றால் நான் தற்கொலை செய்து கொள்வேன் என்றும் அதற்கு என் கணவரும் அவரது தகப்பனாரும் காரணம் என்று எழுதி வைத்துவிட்டு இறந்துவிடுவேன் என்று மிரட்டினேன் என்றால் சரியல்ல. அவ்வாறு வர இயலவில்லை என்றால் எங்களை உடனடியாக மெச்சிக்கோவிற்கு அழைத்து செல்ல வேண்டும் என்று சொன்னேன்

**என்றும் அதற்கு என் கணவர் பாஸ்போட் எனக்கும் என் குழந்தைக்கும் பெற்றுக் கொள்ளும்படியும் அதன்பிறகு விசா கிடைத்தடவும் அழைத்து செல்வதாக சொன்னார்** என்றால் இல்லை. அதன்பிறகு 2017 ம் ஆண்டுதான் நான் பாஸ்போட் வாங்கினேன்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக சாட்சியம் இத்துடன் ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/– M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.